


# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்





மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 228 | உள்ளூர் - 16.08.2026 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 55 | * Issue 228 | வெளியூர் - 17.08.2026 | திங்கட்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com


ரயில்வேயில் 3,993 சூப்பர் வேலைவாய்ப்புகள்!

சூரியன் சிம்மம் பெயர்ச்சி: எச்சரிக்கை!

அமெரிக்க விசா: விதிமுறையில் மாற்றம்!

சபரிமலை நடை திறப்பு!

மதுரை மணி நியூஸ்



▶ **புதுடில்லி:** டில்லியில் வாஜ்பாய் நினைவிடத்தில் ஜனாதிபதி திரவுபதி முர்மு, துணை ஜனாதிபதி சிபிராதாகிருஷ்ணன் பிரதமர் மோடி உள்ளிட்டோர் மலர் துாவி மரியாதை செலுத்தினர்.

## சம்பளம் ஏறப்போகுது!

# 3% அகவிலைப்படி உயர்வு! ஜூலை முதல் அரியர் கணக்கு!

## அரசு ஊழியர்களே... தயாராகுங்கள்!

புதுடெல்லி, ஆக. 16–

மத்திய அரசு ஊழியர்கள் 8வது சம்பள கமிஷனை எதிர்பார்த்து காத்திருக்கும் நிலையில், அதற்கு முன்பாகவே அகவிலைப்படி உயர்வு கிடைக்க வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஒய்வூதியதாரர்களுக்கான அகவிலைப்படி ஆண்டுக்கு இருமுறை, ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் திருத்தப்படுகிறது. 7வது ஊதியக் குழு பரிந்துரைப்படி, அகில இந்திய நுகர்வோர் விலை குறியீட்டின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு இந்த உயர்வு கணக்கிடப்படுகிறது.

தொழிலாளர் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தொழிலாளர் பணியகம் வெளியிட்ட ஜூன் 2026 நுகர்வோர் விலை குறியீடு 151.9 ஆக பதிவாகியுள்ளது. இதன் அடிப்படையில், தற்போதுள்ள 60%




அகவிலைப்படி 63% ஆக உயர வாய்ப்புள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த உயர்வு ஜூலை 1, 2026 முதல் நடைமுறைக்கு வரலாம். ஆனால் மத்திய அமைச்சரவையின் ஒப்புதலுக்குப் பிறகே அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும். கடந்த காலங்களில் ஜூலை மாத அகவிலைப்படி உயர்வு அறிவிப்புகள் செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதங்களில் வெளியாகியுள்ளன.

உயர்வு அறிவிக்கப்பட்டால், ஜூலை முதல் கணக்கிட்டு அரியர் தொகையும் வழங்கப்படலாம். உதாரணமாக, ₹35,400 அடிப்படை சம்பளம் பெறும் ஊழியருக்கு மாதம் சுமார் ₹1,062 கூடுதல் கிடைக்கலாம்.

8வது சம்பள கமிஷன் தாமதமானாலும், அகவிலைப்படி உயர்வு அரசு ஊழியர்களுக்கு உடனடி நிம்மதியாக அமையுமா?

## டிரம்புக்கு எதிராக திரும்பிய வளைகுடா!

வாஷிங்டன், ஆக. 16–

ஈரான் போர் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வரும் நிலையில், அமெரிக்காவுக்கு ஆதரவாக இருந்த சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், கத்தார், பஹ்ரைன், குவைத் ஆகிய 5 வளைகுடா நாடுகளும் தற்போது டிரம்ப் நிர்வாகத்துக்கு எதிராக திரும்பியுள்ளது.

ஈரான் விவகாரத்தில் அமெரிக்கா நிலையான கொள்கையின்றி மாறி மாறி முடிவெடுப்பதாகவும், இதனால் போர் சூழல் மேலும் மோசமடைந்து வருவதாகவும் வளைகுடா நாடுகள் அதிருப்தி தெரிவித்துள்ளன. தங்கள் நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ கட்டமைப்புகளுக்கான



அனுமதியையே ரத்து செய்ய இந்த நாடுகள் திட்டமிட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. "போரை அமெரிக்கா தொடங்கியது; ஆனால் அதன் விலையை நாங்கள் கொடுக்கிறோம்" என வளைகுடா நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. அமெரிக்க ராணுவ இருப்பு தங்களுக்கு பாதுகாப்பற்ற சூழலை உருவாக்குவதாகவும் குற்றம்சாட்டியுள்ளன.

இதற்கிடையே, ஈரான் ஓமன் இடையே ஹார்முஸ் நீரிணை வழித்தடத்தை இயக்குவது தொடர்பான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. சரக்கு கப்பல்களின் போக்குவரத்துக்கான புதிய வழிமுறைகளும் தயாராகி வருகின்றன.

ஆனால் ஈரானின் முக்கிய நிபந்தனை, ஜூன் மாதம் அமெரிக்காவுடன் ஏற்பட்ட அமைதி ஒப்பந்தம் முழுமையாக அமல்படுத்தப்பட வேண்டும் என்பதே.

இந்த நிலை நீடித்தால் கச்சா எண்ணெய் விலை மேலும் உயரக்கூடும். ஏற்கெனவே ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் 82 டாலர் வரை உயர்ந்து பியூச்சர்ஸ் சந்தையில் வர்த்தகமாகிறது.

## இஸ்ரேலுடனான தனது நட்பை இந்தியா மதிக்கிறது; பிரதமர் மோடி!

புதுடில்லி, ஆக. 16–

இந்தியாவின் 80வது சுதந்திர தின வாழ்த்து தெரிவித்த இஸ்ரேல் அதிபர் ஐசக் ஹெர்சாக்கிற்கு பிரதமர் மோடி நன்றி தெரிவித்தார்.

இது குறித்து பிரதமர் மோடி வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது: அதிபர் ஐசக் ஹெர்சாக் உங்களின் அன்பான வாழ்த்துக்களுக்கு நன்றி. இந்தியா,



இஸ்ரேலுடனான தனது நட்பை மதிக்கிறது. நமது மக்களின் நலனுக்காக இரு நாடுகளுக்கு இடையேயான உறவை மேலும் வலுப்படுத்துவதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார். அதேபோல் சுதந்திர தின வாழ்த்து தெரிவித்த, கயானா நாட்டு அதிபர் டாக்டர் இர்பான் அலி, பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான் உள்ளிட்ட நாட்டு தலைவர்களுக்கும் பிரதமர் மோடி நன்றி தெரிவித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

## ஐபோன் பயனர்களுக்கு அவசர எச்சரிக்கை!

புதுடெல்லி, ஆக. 16–

110 நாடுகளில் மெர்சனரி ஸ்பைவேர் தாக்குதல் அபாயம் குறித்து ஆப்பிள் எச்சரிக்கை விடுத்துள்ளது. குறிப்பிட்ட நபர்கள், பத்திரிகையாளர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்டோரின் ஐபோன்களை குறிவைத்து இந்த அதிநவீன உளவு மென்பொருள் தாக்குதல் நடத்தப்படலாம்.

ஆபத்து கண்டறியப்பட்ட பயனர்களுக்கு ஆப்பிள் நேரடியாக எச்சரிக்கை அனுப்பியுள்ளது. Lockdown Mode–ஐ உடனடியாக இயக்கி, புதிய Software Update–ஐ பதிவிறக்கம் செய்யுமாறு ஆப்பிள் அறிவுறுத்தியுள்ளது.




## ஆசிஷ் பானர்ஜி தற்கொலை: கடிதம் சிக்கியது!



மேற்குவங்கம், ஆக. 16–

மேற்கு வங்க சட்டப்பேரவையின் முன்னாள் துணை சபாநாயகர் ஆசிஷ் பானர்ஜி, ராம்பூர்ஹாட்டில் உள்ள திரிணமூல் காங்கிரஸ் அலுவலகத்தில் சடலமாக மீட்கப்பட்டார்.

அவரிடம் இருந்து தற்கொலைக் கடிதம் கைப்பற்றப்பட்டதாகதகவல் வெளியாகியுள்ளது. சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.




பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா சென்னை. இராமசந்திரா மருத்துவக் கல்லூரி மைதானத்தில் தமிழ்நாடு இந்திய குடிமைப் பணி அலுவலர்களுக்கு (TACS) இடையிலான 2024/2025 போட்டிகளில் ஒட்டுமொத்த போட்டியில் முதலிடம் பெற்ற இந்திய ஆட்சி பணி மற்றும் இந்திய காவல் பணி அணியினருக்கு வெற்றி கோப்பையை அரசு கூடுதல் தலைமை செயலாளர் பி. அமுதா, அரசு செயலாளர் மரு. தாரேஸ் அகமது மற்றும் வினித் தேவ் வான்கடே ஆகியோருக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு செயலாளர் சந்தீப் நந்தூரி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி உடனிருந்தனர்.




தலையங்கம்
மதுரை மணி
ஞாயிற்றுக்கிழமை 16.08.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆடி மாதம் 31-ம் தேதி

# வெப்பம் எகிறுகிறது... நடவடிக்கை எப்போது?



ஐரோப்பாவில் கடந்த ஜூன் மாதம் வீசிய வரலாறு காணாத கடும் வெப்ப அலையால், வழக்கத்தை விட கூடுதலாக சுமார் 16,000 பேர் உயிரிழந்துள்ளதாக ஐரோப்பிய இறப்பு கண்காணிப்பு வலையமைப்பு தெரிவித்துள்ளது.

37 டிகிரி செல்சியஸைத் தாண்டிய வெப்பநிலையால் பிரான்ஸ், பெல்ஜியம், ஜெர்மனி உள்ளிட்ட நாடுகளில் உயிரிழப்புகள் கணிசமாக அதிகரித்தன. கடும் வெப்பத்தை எதிர்கொள்ள போதிய கட்டமைப்பு இல்லாததும் முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையே, ஐரோப்பாவை மீண்டும் ஒரு புதிய வெப்ப அலை தாக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. பிரிட்டனில் 5–வது வெப்ப அலைக்கான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், பிரான்சில் பல பகுதிகளில் வெப்பநிலை 35 டிகிரி செல்சியஸ் வரை உயரும் என எச்சரிக்கப்பட்டுள்ளது

உலகம் முழுவதும் வெப்ப அலைகள் அதிகரித்து வரும் நிலையில், அவற்றின் தாக்கத்தை குறைக்க அரசுகள் மட்டுமின்றி பொதுமக்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என உலக சுகாதார அமைப்பு (WHO) வலியுறுத்துகிறது. வெப்ப அலைகளால் ஏற்படும் பல உடல்நல பாதிப்புகளை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம் குறைக்க முடியும்.

**முதலில் செய்ய வேண்டியது...**

மரங்களை பெருமளவில் நட வேண்டும் நகரங்களில் பசுமைப் பகுதிகளை அதிகரித்து வெப்பத் தீவு விளைவைக் குறைக்க வேண்டும்.

குளிர்ச்சியான நகரங்களை உருவாக்க வேண்டும் நிழல் தரும் சாலைகள், பூங்காக்கள், நீர்நிலைகள் மற்றும் வெப்பத்தை பிரதிபலிக்கும் 'கூல் ரூஃப்' போன்ற திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

வீடுகளை வெப்பத்துக்கு ஏற்றவாறு மாற்ற வேண்டும் இயற்கை காற்றோட்டம், நிழல் மற்றும் வெப்பத்தைத் தடுக்கும் கட்டுமான முறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

நீர் மற்றும் நீர்நிலைகளை பாதுகாக்க வேண்டும் ஏரி, குளம், ஆறு உள்ளிட்ட நீர்நிலைகளை பாதுகாப்பது நகர வெப்பத்தைக் கட்டுப்படுத்த உதவும்.

புதுப்பிக்கத்தக்க ஆற்றலை அதிகரிக்க வேண்டும் நிலக்கரி, எண்ணெய் போன்ற புதைபடிவ எரிபொருட்களின் பயன்பாட்டையும் பசுமைக்குடில் வாயு வெளியேற்றத்தையும் குறைக்க வேண்டும்.

வெப்ப எச்சரிக்கை அமைப்புகளை வலுப்படுத்த வேண்டும் வெப்ப அலை வருவதற்கு முன்பே பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்து, குறிப்பாக முதியவர்கள், குழந்தைகள் உள்ளிட்ட அதிக ஆபத்தில் உள்ளவர்களை பாதுகாக்க வேண்டும். WHO–வின் புதிய வழிகாட்டுதல்களும் இதுபோன்ற HeatHealth Action Plans–ஐ வலியுறுத்துகின்றன.

தனிநபர் பாதுகாப்பும் அவசியம்: கடும் வெப்ப நேரத்தில் வெளியில் செல்வதைத் தவிர்த்து, நிழலில் இருப்பது, போதுமான திரவம் அருந்துவது, உடலை குளிர்ச்சியாக வைத்திருப்பது மற்றும் அதிகாரப்பூர்வ வெப்ப எச்சரிக்கைகளைப் பின்பற்றுவது முக்கியம்.

உலகம் இப்போது விழித்துக்கொள்ள வேண்டும்!

"மரங்களை காப்போம்... நீர்நிலைகளை காப்போம்... கார்பன் வெளியேற்றத்தை குறைப்போம்... வெப்ப அலையின் உயிரிழப்புகளைத் தடுப்போம்!"

உலகம் வெப்பமடைவதைத் தடுக்க காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதும், வெப்பத்துக்கு ஏற்ப நகரங்களையும் சுகாதார அமைப்புகளையும் தயார்படுத்துவதும் ஒரே நேரத்தில் நடைபெற வேண்டும்.

# மீனவர்கள் கைது விவகாரம்: மத்திய மந்திரியை சந்திக்க அமைச்சர் ஸ்ரீநாத் டெல்லி பயணம்!

சென்னை, ஆக. 16–





சென்னை சிந்தாதிரிபேட்டையில் ஆதிபுரீஸ்வரர் கோவிலில் நேற்று சுதந்திர தின விழாவையொட்டி நடைபெற்ற சமபந்தி விருந்தில் மீன்வளத்துறை அமைச்சர் ஸ்ரீநாத் பங்கேற்றார். அவரிடம், இலங்கை கடற்படையினரால் ராமேசுவரம் மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்பட்டு வரும் விவகாரத்தில் எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளது மட்டுமல்லாமல், உணர்வுப்பூர்வமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என கேட்டிருப்பது தொடர்பாக பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு அமைச்சர் ஸ்ரீநாத் பதில் அளிக்கையில், "இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது தொடர்பாக பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. நான் நாளை மறுநாள் (செவ்வாய்க்கிழமை) டெல்லி செல்கிறேன். அங்கு வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கரை சந்தித்து இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தி நல்ல முடிவு எடுக்கப்படும். மீனவர்கள் பிரச்சினையில் த.வெ.க. அரசு எடுக்கும் உணர்வுப்பூர்வமான நடவடிக்கை என்ன என்பதை செயலில் காட்டுவோம்" என்றார்.

# இந்திரா சுந்தரம் தொண்டு நிறுவனம் சார்பில் சுதந்திர தின விழா!

திருப்பூர், ஆக. 16–



இந்திராசுந்தரம் தொண்டு நிறுவனம் சார்பில் நிறுவனர் திருமதி இந்திராசுந்தரம் தலைமையில் செயலாளர் ராஜா முகமது முன்னிலையில் ராக்கியாபாளையத்தில் உள்ள தலைமை அலுவலகத்தில் தேசியக்கொடி ஏற்றப்பட்டு சமாதான புறா பறக்க விட்டு மேலும் விருது வழங்கும் விழா நடைபெற்றது இந்த நிகழ்வில் முன்னாள் மேயர் திருமதி விசாலாட்சி. தொழிலதிபர் தங்கவேல் பழனிச்சாமி, சக்சம் ரத்தினசாமி.வக்கீல் சுவாதி. மேலும் தொண்டு நிறுவனம் சார்பில் விஜயலட்சுமி ,சேக், சாந்தி, அய்யாசாமி, சதீஷ்குமார், அபு, சித்ரா உள்ளிட்ட தொண்டு நிறுவன உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர் கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது,,,,

# ஆண்டிபட்டி ஒன்றியத்தில் 30 ஊராட்சிகளில் சிறப்பு கிராம சபை கூட்டம்!

ஆண்டிபட்டி, ஆக. 16–



நாட்டின் 80–வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு, தேனி மாவட்டம் ஆண்டிபட்டி ஒன்றியத்திற்குட்பட்ட 30 கிராம ஊராட்சிகளிலும் சிறப்பு கிராம சபை கூட்டங்கள் நடைபெற்றன. கிராம ஊராட்சிகளில் தனி அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் ஊராட்சி செயலாளர்கள் தலைமையில் இக்கூட்டங்கள் நடைபெற்றன.

இதில் டி.ராஜகோபாலன்பட்டி ஊராட்சி பகுதியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) சுபா ராம் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் சாலை வசதி, சீரான குடிநீர் விநியோகம் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் குறித்தும், சுகாதாரப் பணிகளை முடுக்கி விடுவது குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

மேலும், ஊராட்சியில் வசிக்கும் பொதுமக்கள் தங்கள் பகுதிக்கான வரி நிலுவைகளை உரிய காலத்திற்குள் செலுத்த வேண்டும் என்றும், அப்போதுதான் அடிப்படை வசதிகளை எந்தவிதத் தொய்வுமின்றி நிறைவேற்ற முடியும் என்பதால் பொதுமக்கள் ஊராட்சி நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. இந்நிகழ்வில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராகவன், சரவணன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பாக்கியலட்சுமி, ஊராட்சி செயலர் பிச்சைமணி உள்ளிட்ட அரசு அதிகாரிகள், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இதேபோன்று டி.சுப்புலாபுரம் ஊராட்சியில் செயலர் பாலமுருகன் தலைமையிலும், அனுப்பபட்டியில் செயலர் லட்சுமி, பிச்சம்பட்டியில் செயலர் முத்துக்குமார், கன்னியப்பபிள்ளைபட்டியில் செயலர் ராஜேஷ், கதிர் நரசிங்கபுரத்தில் செயலர் வேல்முருகன், ராஜதானியில் செயலர் ஜோதிபாசு, ரெங்கசமுத்திரத்தில் செயலர் ஜீவா, தெப்பம்பட்டியில் செயலர் ஞானசேகர் ஆகியோர் தலைமையிலும் கிராம சபை கூட்டங்கள் விறுவிறுப்பாக நடைபெற்றது. ஆண்டிபட்டியில் பகுதியில் சுதந்திர தினவிழாவை முன்னிட்டு அரசு பள்ளிகளில் கலைநிகழ்ச்சிகள்,பள்ளி மாணவ, மாணவிகளின் நடன நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. ஆண்டிபட்டி லிட்டில் பிளவர் பள்ளிமற்றும் டைமன் வித்தியாலயா பள்ளிகளில் தேசிய கொடி ஏற்றப்பட்டு இனிப்புகள் வழங்கப்பட்டன.

## தேனி மாவட்ட சிறைச்சாலையில்

# சுதந்திர தின விழா கொண்டாட்டம் - கைதிகளுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன!



தேனி, ஆக 16–

இந்தியாவின் 80–வது சுதந்திர தினத்தை முன்னிட்டு தேனி மாவட்ட சிறைச்சாலையில் சுதந்திர தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழாவில் சிறைச்சாலை கண்காணிப்பாளர் நா. நாகேஸ்வரன் தேசிய கொடியை ஏற்றி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து தேசபக்தி பாடல்கள் இசைக்கப்பட்டன. இதையடுத்து சிறையில் உள்ள அனைத்து கைதிகளுக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

**விழாவில் கலந்து கொண்டவர்கள்**

இந்த விழாவில் தேனி மாவட்ட சிறைச்சாலை அலுவல் சாரா பார்வையாளர் ஜி. சுப்புராஜ் சிறைச்சாலை உதவி சிறை அலுவலர் எஸ். சீனிவாசன்முதன்மை தலைமை காவலர் பி. கண்ணன் மற்றும் சிறைச்சாலை அலுவல் அதிகாரிகள், பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



பழனி சண்முகநதி பள்ளிவாசலில் சிறப்பு தொழுகை நடைபெற்றது.





பழனியில் காங்கிரஸ் சார்பில் சுதந்திர தின விழா நடைபெற்றது. இதில் நகரத் தலைவர் முத்து விஜயன் முருகானந்தம் எஸ் சுந்தர் பத்மினி முருகானந்தம் பாப்பு சாமி மகாலட்சுமி மாசிலாமணி வீரமணி எஸ் சி பி பாலகுமார் தேவேந்திரன் தமிழரசன் குப்புசாமி பீட்டர் முகமது அலி சாய்ரா பானு மகாலட்சுமி ஆகியோர் பங்கேற்றனர்.



மதுரை வழிகாட்டி மனிதர்கள் அறக்கட்டளை சார்பில் சிம்மக்கலில் செயல்படும் மாவட்ட மைய நூலகத்தில் சுதந்திர தினம் முன்னிட்டு வாசகர்கள் பயன்பாட்டுக்கு பிளாஸ்டிக் சேர்கள் நன்கொடை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. அறக்கட்டளை நிறுவனர் மணிகண்டன் வழங்க மாவட்ட முதன்மை நூலகர் நித்யானந்தம் பெற்றுக் கொண்டார். மாவட்ட நூலக அலுவலர் பழனிச்சாமி தேசியக் கொடி ஏற்றினார். சமூக சேவகர்கள் ரமேஷ்குமார், ஈஸ்வரன், நூலக பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கோபுரம் பவுண்டேசன் நிறுவனத்திற்கு நற்சான்றிதழ்!



கோபுரம் பவுண்டேஷன் நிறுவனத்திற்கு திருப்பூர் மாவட்ட ஆட்சியர் திரு மனிஷ் நாரணவரே இ ஆ ப அவர்கள் திருப்பூரில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் சிறந்த நற்சான்றிதழ் வழங்கினர் இதுகுறித்து பேசிய நிறுவனர் கோவிந்தராஜ், தலைவர் தம்பிரான் ரிஷபானந்தர் ஆகியோர் 125 ஆதரவற்ற நல்லடக்கங்களை தானம் செய்தது மேலும் 4000 தூய்மை பணியாளர்களுக்கு உபகரணங்கள் உடை உணவு வழங்கியது மேலும் திருப்பூர் தஞ்சாவூர் மாவட்டங்களில் ஆதரவற்றவர்களுக்கு தினசரி உணவு வழங்கி வருவதாகவும் தெரிவித்தனர் மேலும் மாவட்ட ஆட்சியர் நற்சான்றிதழை வழங்கியது மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்தனர்....



பழனி அரசு மருத்துவமனையில் சுதந்திர தின விழாவையொட்டி ரத்ததான முகாமை விடுதலைச் சிறுத்தைகள் கட்சி இளஞ்சிறுத்தைகள் பிரிவு மாநிலச் செயலாளர் ஜே பி சரவணன் தொடங்கி வைத்தார். இதில் டாக்டர் விமல் உள்பட ஏராளமான பங்கேற்றனர்.



# சூரியன் சிம்மம் பெயர்ச்சி: இந்தராசியினருக்கு எச்சரிக்கை!



ஆவணி மாதம் ஆகஸ்ட் 17ஆம் தேதி தொடங்குகிறது. அன்று காலை 7.50 மணிக்கு சூரிய பகவான் தனது சொந்த ராசியான சிம்மத்தில் பெயர்ச்சியாகிறார். இந்த பெயர்ச்சியின் காரணமாக சில ராசியினருக்கு தொழில், பணம், குடும்பம் உள்ளிட்ட விஷயங்களில் மாற்றங்கள் ஏற்படலாம் என ஜோதிடக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

**மேஷம்:** புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தொழில், வேலை, வியாபாரம் மற்றும் படிப்பில் முன்னேற்றம் ஏற்படலாம். பணவரவு அதிகரிப்பதுடன், உத்தியோகத்தில் சம்பள உயர்வுக்கும் வாய்ப்பு உள்ளது.

**கன்னி:** பொருளாதாரத்தில் முன்னேற்றம் காணப்படும். பணவரவு அதிகரிக்கும். வீடு, நிலம், வாகனம் மற்றும் ஆபரணங்கள் வாங்கும் யோகம் ஏற்படலாம். உடல்நலத்தில் கூடுதல் கவனம் தேவை.

**தனுசு:** செல்வாக்கு மற்றும் தன்னம்பிக்கை அதிகரிக்கும். பணப் பிரச்சினைகள் தீர வாய்ப்புள்ளது. உறவுகள் மற்றும் குடும்ப விஷயங்களில் மகிழ்ச்சி ஏற்படலாம்.

**மகரம்:** வாகனம் ஓட்டும்போதும் பயணங்களின்போதும் கவனம் தேவை. மேலதிகாரிகளுடன் தேவையற்ற வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் பொறுமையுடன் செயல்பட வேண்டும்.

**கும்பம்:** தொழில், உத்தியோகம், வியாபாரம் மற்றும் படிப்பில் சாதகமான மாற்றங்கள் ஏற்படலாம். இடமாற்றம் அல்லது வேலை மாற்றத்திற்கான வாய்ப்பும் உள்ளது.

மொத்தத்தில், சூரியன் சிம்மப் பெயர்ச்சி இந்த ராசியினருக்கு புதிய மாற்றங்களையும், சிலருக்கு எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய சூழலையும் உருவாக்கும் என ஜோதிடர்கள் கூறுகின்றனர்.

## சினிமா துளிகள்..!

# டீ பரிமாறியவர்... இன்று சினிமாவின் 'ராவணன்'!



வெறும் ரூ.300–யுடன் வீட்டை விட்டு வெளியேறிய யாஷ், பெங்களூருவில் நாடகக் குழுவில் பணியாற்றி தினமும் ரூ.50 சம்பளம் பெற்றார். பின்னர் சிறு வேடங்கள் மற்றும் தொலைக்காட்சித் தொடர்களில் நடித்து, தனது விடாமுயற்சியால் முன்னணி நடிகராக உயர்ந்தார்.

2018–ல் வெளியான K.G.F: Chapter 1 அவரை பான்–இந்தியா நட்சத்திரமாக மாற்றியது. தொடர்ந்து K.G.F: Chapter 2ரூ.1,200 கோடிக்கும் மேல் வசூலித்து அவரது புகழை உலக அளவில் உயர்த்தியது.

தற்போது ரூ.4,000 கோடி பட்ஜெட்டில் உருவாகும் 'ராமாயணா' படத்தில் ராவணனாக நடிப்பதுடன், இணை தயாரிப்பாளராகவும் உள்ளார். 'டாக்ஸிக்' படத்திலும் நடித்து, இணை தயாரிப்பாளராக செயல்படுகிறார்.

ஒருகாலத்தில் ரூ.50 சம்பளம்... இன்று ஒரு படத்துக்கு ரூ.50 கோடி! யாஷின் பயணம் இளைஞர்களுக்கு ஒரு மிகப்பெரிய உத்வேகம்.

# தமிழில் டிவி ஷோ தொகுப்பாளராக வந்த சமந்தா..





நடிகை சமந்தா தற்போது கர்ப்பமாக இருக்கும் நிலையில் படங்களில் நடிப்பதில் இருந்து பிரேக் எடுத்துக்கொண்டு இருக்கிறார். அதை அவரே முன்பு அறிவித்து இருந்தார். இந்நிலையில் சமந்தா டிவி நிகழ்ச்சி ஒன்றை தொகுத்து வழங்குவதாக அறிவிப்பு வந்திருக்கிறது.

தமிழில் "சோனி விழா" என்ற புது டிவி சேனல் தொடங்கப்பட்ட நிலையில், அதில் வரப்போகும் மாஸ்டர் செஃப் நிகழ்ச்சியை தான் சமந்தா தொகுத்து வழங்குகிறார். அதில் பிரபலங்கள் பலரும் போட்டியாளராக வர போகிறார்களாம்.இதற்குமுன் மாஸ்டர்செஃப் நிகழ்ச்சி தமிழில் சன் டிவியால் நடத்தப்பட்டது. அதை விஜய் சேதுபதி தொகுத்து வழங்கி இருந்தார். அந்த ஷோவுக்கு வரவேற்பு கிடைக்காததால் நிறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மதுரை மணி

உள்ளூர் 16.08.26 வெளியூர் 17.08.26

நலம் நலமறிய..!

மருத்துவ குறிப்புகள்



## சாப்பிட்டதும் நடங்க! உடலுக்கு நன்மை தரும்!!



உணவு உண்ட பிறகு 10 நிமிடங்கள் மெதுவாக நடைப்பயிற்சி மேற்கொள்வது செரிமானத்திற்கு உதவுவதுடன், ரத்தச் சர்க்கரை அதிகரிப்பையும் கட்டுப்படுத்த உதவும் என மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இரவு உணவுக்குப் பிறகு மெதுவாக நடப்பது நல்ல தூக்கத்திற்கும், மன அழுத்தம் குறைவதற்கும்உதவலாம். மேலும் வாயுத்தொல்லை, அமிலத்தன்மை மற்றும் மலச்சிக்கல் போன்ற செரிமானப் பிரச்சினைகளைக் குறைக்கவும் உதவக்கூடும்.

ஆனால் உணவு உண்ட உடனே வேகமாக நடப்பது, ஓடுவது அல்லது கடுமையான உடற்பயிற்சி செய்வதைத் தவிர்க்க வேண்டும். ஆரம்பத்தில் 10 நிமிடங்களில் தொடங்கி, தேவைக்கேற்ப 2030 நிமிடங்கள் வரை மெதுவாக நடக்கலாம்.

**சிறிய நடை... பெரிய ஆரோக்கியப் பலன்!**

குறிப்பு: தனிப்பட்ட உடல்நிலை அல்லது மருத்துவப் பிரச்சினைகள் இருப்பவர்கள் மருத்துவரின் ஆலோசனையைப் பெறுவது நல்லது.

## மின்சாரத்தில் இயங்கும் உலகின் முதல் பெரிய விமானம் சோதனை வெற்றி!



நியூயார்க், ஆக. 16–

முழுக்க முழுக்க மின்சாரத்தில் இயங்கும் உலகின் முதல் மிகப்பெரிய விமானமான 'எக்ஸ்1'–யை வெற்றிகரமாக பறக்கவிட்டு அமெரிக்காவின் ஹார்ட் ஏரோஸ்பேஸ் நிறுவனம் சாதனை படைத்துள்ளது.

நியூயார்க் விமான நிலையத்தில் நடந்த சோதனையின்போது அந்த விமானம் 1,100 அடி உயரம் வரை சென்று 27 நிமிடங்கள் பறந்து தரை இறங்கியது. இதற்கு வெறும் ரூ.477 மதிப்புள்ள மின்சாரம் மட்டுமே செலவானதாக அந்த நிறுவனம் தகவல் தெரிவித்துள்ளது. இதுவே தற்போது உலகின் மிகப்பெரிய பேட்டரியில் இயங்கக்கூடிய மின்சார விமானம் என்ற சாதனையை பெற்றுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு, ஹார்ட் ஏரோஸ்பேஸ் நிறுவனம் 30 பேர் அமரக்கூடிய வணிகரீதியான பயணிகள் விமானத்தை உருவாக்கி வருகிறது.

## பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்டவர்களின் பட்டியல் வெளியீடு!



சென்னை, ஆக. 16–

பயிர்க் கடன் தள்ளுபடி செய்யப்பட்டவர்களின் பட்டியலை, தமிழக கூட்டுறவுத் துறை வெளியிட்டுள்ளது.

தமிழகத்தில், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு சங்கங்களில், பயிர்க்கடன் வழங்கப்படுகிறது. தமிழகத்தில் புதிதாக பொறுப்பேற்றுள்ள த.வெ.க., அரசு, 2025 மே முதல், இந்த ஆண்டு பிப்ரவரி வரை, கூட்டுறவு நிறுவனங்களில், பயிர்க்கடன் பெற்ற, 14.43 லட்சம் விவசாயிகளின், 5,932 கோடி ரூபாய் பயிர்க் கடன்களை தள்ளுபடி செய்தது. மாவட்ட வாரியாக பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்ட விவசாயிகள், அவர்களின் தள்ளுபடி தொகை விபரம் ஆகியவை, இணையதளத்தில் 'www.kooturavu.tn.gov.in வெளியிடப்பட்டுள்ளது. தமிழகம் முழுதும் உள்ள வி.ஏ.ஓ., அலுவல கங்கள் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்க அலுவலகங்களில், பயிர்க் கடன் தள்ளுபடி திட்ட பயனாளிகள் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.

## வார விடுமுறை: குற்றாலத்தில் ஆனந்த குளியல் போடும் சுற்றுலா பயணிகள்!



தென்காசி, ஆக. 16–

முக்கிய சுற்றுலாத்தலமான குற்றால அருவிகளுக்கும் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. குறிப்பாக மெயின் அருவி, ஐந்தருவி, பழைய குற்றாலம், சிற்றருவி, புலியருவி உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் சீராக தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது.

விடுமுறை என்பதால் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் குற்றாலத்தில் குவிந்தனர். ஐந்தருவி, மெயின் அருவி பழைய குற்றால அருவிகளில் நீண்ட வரிசையில் நின்று குளித்து மகிழ்ந்தனர்.

அருவிகளில் குளித்த சுற்றுலா பயணிகள் அருவிக்கரை பகுதியில் உள்ள கடைகளில் தேநீர், தின்பண்டங்களை வாங்கி ருசித்தனர். இதனால் கடைகளிலும் வியாபாரம் சூடுபிடித்ததால் வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

# திருப்பதியில் ஆர்ஜித சேவை டிக்கெட்டுகள் வெளியீடு!



திருமலை, ஆக. 16–

நவம்பர் மாதத்திற்கான பல்வேறு தரிசனங்கள் மற்றும் அறை ஒதுக்கீடு தொடர்பான கோட்டாவை திருமலை திருப்பதி தேவஸ்தானம் (TTD) ஆன்லைனில் வெளியிட உள்ளது.

சுப்ரபாதம், தோமாலை, அர்ச்சனை, அஷ்டதள பாதபத்மாராதனை சேவைகளுக்கான டிக்கெட் கோட்டா ஆகஸ்ட் 18 காலை 10 மணிக்கு ஆன்லைனில் வெளியிடப்படும். எலக்ட்ரானிக் டிப் முறையில் ஆகஸ்ட் 20 காலை 10 மணி வரை பதிவு செய்யலாம். டிக்கெட் கிடைத்தவர்கள் ஆகஸ்ட் 20 முதல் 22 மதியம் 12 மணிக்குள் கட்டணம் செலுத்த வேண்டும்.

கல்யாணோத்ஸவம், ஊஞ்சல் சேவை, அர்ஜித பிரம்மோத்ஸவம், சகஸ்ர தீப அலங்கார சேவை, புஷ்பயாகம் ஆகியவற்றுக்கான டிக்கெட்டுகள் ஆகஸ்ட் 21 காலை 10 மணிக்கு ஆன்லைனில் வெளியிடப்படும்.

விர்ச்சுவல் சேவைகள் மற்றும் அவற்றுக்கான தரிசன ஸ்லாட்டுகள் ஆகஸ்ட் 21 மதியம் 3 மணிக்கு ஆன்லைனில் வெளியிடப்படும்.

அங்கபிரதட்சிண டோக்கன் கோட்டா காலை 10 மணிக்கு வெளியிடப்படும்.

ஸ்ரீவாணி அறக்கட்டளை தரிசன டிக்கெட்டுகள் காலை 11 மணிக்கு வெளியிடப்படும். முதியோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் நீண்டகால நோயாளிகளு க்கான இலவச சிறப்பு தரிசன டோக்கன் கோட்டா ஆகஸ்ட் 24 மதியம் 3 மணிக்கு ஆன்லைனில் வெளியிடப்படும். சிறப்பு நுழைவு தரிசன டிக்கெட் கோட்டா காலை 10 மணிக்கு ஆன்லைனில் வெளியிடப்படும். திருமலை மற்றும் திருப்பதியில் உள்ள அறைகளுக்கான கோட்டா ஆகஸ்ட் 25 மதியம் 3 மணிக்கு ஆன்லைனில் வெளியிடப்படும்.

ஸ்ரீவாரி அர்ஜித சேவைகள் மற்றும் தரிசன டிக்கெட்டுகளை மூலம் முன்பதிவு செய்து கொள்ளுமாறு பக்தர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

# சபரிமலை நடை திறப்பு!



சபரிமலை, ஆக. 16–

சபரிமலை அய்யப்பன் கோவில் நடை மண்டல மற்றும் மகரவிளக்கு பூஜை காலங்கள் மட்டுமின்றி. மாதாந்திர பூஜைக்காக ஒவ்வொரு தமிழ் மாதத்திலும் முதல் 5 நாட்கள் திறக்கப்படும். அந்த நாட்களில் பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள். அதன்படி ஆவணி மாத பூஜைகளுக்காக (16–ந்தேதி) மாலை 5 மணிக்கு அய்யப்பன் கோவில் நடை திறக்கப்படுகிறது. கோவிலின் தலைமை தந்திரி கண்டரரு பிரம்மதத்தன் முன்னிலையில் சபரிமலை அய்யப்பன் கோவில் மேல்சாந்தி பிரசாத் நம்பூதிரி, நடையை திறக்கிறார்.

இன்று மாலை நடை திறக்கப்பட்ட பிறகு சிறப்பு பூஜைகள் எதுவும் நடக்காது. நாளை (17–ந்தேதி) மாதாந்திர பூஜை தொடங்குகிறது. அன்று முதல் வருகிற 21–ந்தேதி வரை கோவில் நடை திறந்திருக்கும். இந்த நாட்களில் பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

தினமும் அதிகாலையில் கோவில் நடை திறக்கப் பட்டு நிர்மால்ய தரிசனம், அபிஷேகம், கணபதி ஹோமம் உள்ளிட்ட பூஜைகளும், அதனைத்தொடர்ந்து நெய் அஷ்டாபிஷேகம், உச்ச அபிஷேகம், பூஜை. தீபா தீபாராதனை, புஷ்பாபிஷேகம் உள்ளிட்ட பூஜைகளும் நடத்தப்படும். இந்த பூஜைகள் அனைத்திலும் பக்தர்கள் கலந்துகொள்ளலாம் என்பதால் மாதாந்திர பூஜையின் போதும், பக்தர்கள் வருகை அதிகமாக இருக்கும். சாமி தரிசனம் செய்ய விரும்பும் பக்தர்கள் www.sabari–ma–laonline.org என்ற இணையதளத்தில் முன்பதிவு செய்து வரவேண்டும் என்று திருவிதாங்கூர் தேவசம் போர்டு தெரிவித்துள்ளது.

முன்பதிவு செய்த பக்தர்கள் மட்டுமே மாதாந்திர பூஜையில் பங்கேற்க முடியும். ஆவணி மாத மாதாந்திர பூஜை 21–ந்தேதி முடிவடைகிறது. அன்றைய தினம் இரவு 10 மணிக்கு சிறப்பு பூஜைகள் நிறைவடைந்ததும் அரிவராசனம் பாடப்பட்டு கோவில் நடை சாத்தப்படும்.

# கும்பகோணம் டிகிரி காபி உள்ளிட்ட 5 உணவு பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற தமிழக அரசு விண்ணப்பம்!



சென்னை, ஆக. 16–

தமிழகத்தில் உணவு பதப்படுத்துதல், வேளாண் ஏற்றுமதி துறைகளில் முதலீடுகளை ஊக்குவிப்பது, வேளாண் விளைபொருட்கள் மற்றும் அவை சார்ந்த மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் பணிகளை, டி.என்.எபெக்ஸ் எனப்படும், தமிழக உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டு கழகம் செய்து வருகிறது.

மேலும், தமிழகத்தின் தனித்துவமான, பாரம்பரியமிக்க பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற்றுத் தரும் பணியையும் செய்கிறது. ஒரு குறிப்பிட்ட புவியியல் அமைப்பு, ஒரு பகுதி, நகரம் போன்றவற்றுடன் தொடர்புடைய பாரம்பரிய தயாரிப்புக்கு, புவிசார் குறியீடு வழங்கப்படுகிறது. இதற்கு, இந்திய அறிவு அறிவுசார் சொத்துரிமை நிறுவனத்திடம் விண்ணப்பிக்க வேண்டும்.

அதன்படி தற்போது, திண்டுக்கல் மாவட்டம் – கொடைக்கானல் பன்றிமலை காபி, கடலுார் – காராமணிக்குப்பம் கருவாடு, தஞ்சை – கும்பகோணம் டிகிரி காபி, நீலகிரி நெய், மதுரை– பாலமேடு பால்கோவா ஆகிய ஐந்து பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறுவதற்காக, டி.என்.எபெக்ஸ் நிறுவனம், மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கவுன்சில் வாயிலாக விண்ணப்பித்துள்ளது.

ஏற்கனவே, செட்டிநாடு கைமுறுக்கு மற்றும் சீடை, ராமநாதபுரம் பனை கருப்பட்டி, கோவில்பட்டி சீவல், ராமநாதபுரம் பட்டரை கருவாடு போன்றவற்றுக்கு புவிசார் குறியீடு பெற விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, சிறு, குறு, நடுத்தர தொழில்கள் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், 'புவிசார் குறியீடு பெறப்பட்ட பொருட்களுக்கு, வெளிநாடுகளில் தேவை அதிகரிக்கும். இது, ஏற்றுமதி அதிகரிப்புக்கு வழிவகுக்கிறது. எனவே, தமிழகத்தில் தனித்துவமான பாரம்பரியமிக்க பொருட்களுக்கு, புவிசார் குறியீடு பெறுவதன் வாயிலாக, அவை அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படும். இதனால், உள்ளூர் மக்களின் வாழ்வாதாரம் மேம்படும்' என்றார்.

# வங்கக்கடலில் காற்றழுத்தத் தாழ்வு!



சென்னை, ஆக. 16–

வடமேற்கு வங்கக்கடலில் நிலவிய மேலடுக்கு சுழற்சியின் தாக்கத்தால் மேற்குவங்கம்– ஒடிசா பகுதியில் காற்றழுத்த தாழ்வு உருவாகியுள்ளது.

காற்றழுத்த தாழ்வு பகுதி அடுத்த 24 மணிநேரத்தில் வடமேற்கு திசையில் நகர்ந்து வலுப்பெற வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கடல் கொந்தளிப்புடன் காணப்படும் என்பதால், ஆகஸ்டு 18ம் தேதி வரை மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தமிழக கடலோரப்பகுதிகளில் கீழ்மட்ட வளிமண்டலத்தில் நிலவும் காற்றழுத்தத் தாழ்வுப்பாதை காரணமாக இன்று முதல் 21–ம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும்.

சென்னையில், இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை/இரவு நேரங்களில் நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான/மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருந்தது.

இந்த நிலையில், வடமேற்கு வங்கக் கடல் மற்றும் மேற்கு வங்கம் – வடக்கு ஒடிசா கடலோரப் பகுதிகளை ஒட்டிய பகுதிகளில் புதிய காற்றழுத்தத் தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளது என்று இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இது வடமேற்கு திசையில் நகர்ந்து 24 மணி நேரத்தில் வலுவடையும் என கணிக்கப்பட்டுள்ளது.

காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக பருவமழை தீவிரமடைய வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இன்று முதல் 3 நாட்களுக்கு மேற்கு வங்கம், ஒடிசா மற்றும் வடக்கு ஆந்திரக் கடலோரப் பகுதிகளில் பலத்த காற்று வீச வாய்ப்புள்ளது எனவும், மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தி உள்ளது.

# பான் மசாலா விளம்பரம் விவகாரம்: நடிகர்கள் ஷாருக் கான், அஜய் தேவ்கன் ஆகியோருக்கு FDA நோட்டீஸ்!



மகாராஷ்டிரா மாநிலத்தில் தடைசெய்யப்பட்டுள்ள பான் மசாலாவின் விளம்பரத்தில் நடித்து, அதனை மறைமுகமாக பிரபலப்படுத்தியதற்காக, நடிகர்கள் ஷாருக் கான், அஜய் தேவ்கன் மற்றும் டைகர் ஷெராஃப் ஆகியோருக்கு மகாராஷ்டிரா உணவு மற்றும் மருந்து நிர்வாகம் (FDA) விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

மகாராஷ்டிராவில் பான் மசால் மற்றும் குட்கா பயன்பாட்டிற்கு அம்மாநில அரசு முழுவதுமாக தடை விதித்துள்ளது.

இதையடுத்து கடந்த 2024–ஆம் ஆண்டில் வெளியான, பான் மசாலா நிறுவனத்தின் ஏலக்காய் விளம்பரத்தில் ஷாருக் கான், அஜய் தேவ்கன் மற்றும் டைகஎ ஷெரஃப் ஆகிய மூன்று நடிகர்களும் ஒன்றாக இணைந்து நடித்திருந்தனர்.

இந்தநிலையில் தடை செய்யப்பட்டுள்ள புகையிலை பொருட்கள் மீதான விளம்பரத்தில் நடித்ததற்காக, மூன்று நடிகர்களுக்கும் விளக்கம் கேட்டு மகாராஷ்டிரா உணவு மற்றும் மருந்து நிர்வாகம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இந்த மூன்று நடிகர்களுக்கு எதிராகவும் ஏன் சட்ட நடவடிக்கை எடுக்ககூடாது என்பதை விவரித்து, 15 நாட்களுக்குள் எழுத்துப்பூர்வ விளக்கம் அளிக்குமாறும் கூறியுள்ளது.

மேலும் இந்த மூன்று நடிகர்களும் இந்தவிதமான விளம்பர பிரச்சாரத்தில் பங்கேற்பதை உடனடியாக நிறுத்திக்கொள்ளவும், புகையிலை தொடர்பான அனைத்து விளம்பர உள்ளடக்கங்களையும் தங்களது அதிகாரப்பூர்வ சமூக ஊடகக் கணக்குகளிலிருந்து அகற்றவும் அறிவுறுத்தியுள்ளது.

# வேலை வாய்ப்பு

## ரயில்வேயில் 3,993 சூப்பர் வேலைவாய்ப்புகள்!




மொத்த காலியிடங்கள்: 3,993
பணிகள்: Junior Engineer, Depot Material Superintendent
கல்வித்தகுதி: Diploma / B.E. / B.Tech / B.Sc
பணி: மத்திய அரசு ரயில்வே
பணியிடம்: இந்தியா முழுவதும்
விண்ணப்ப முறை: ஆன்லைன்
விண்ணப்ப தொடக்கம்: 14.08.2026
கடைசி நாள்: 13.09.2026
அறிவிப்பு எண்: 04/2026
ரூ.35,400 முதல் ஊதியம்!
அதிகாரப்பூர்வ விண்ணப்ப இணையதளம்: https://www.rrbapply.gov.in/

குறிப்பு: பணியிடங்கள், கல்வித்தகுதி, வயது வரம்பு மற்றும் தேர்வு விதிமுறைகள் தொடர்பான இறுதி முடிவுகளுக்கு RRB–யின் அதிகாரப்பூர்வ அறிவிப்பையே அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

## காஸ் சிலிண்டர் உண்மை சரிபார்ப்பு பணிக்கு அவகாசம் நீட்டிப்பு!



சென்னை, ஆக. 16–

தமிழகத்தில், வீட்டு சமையல் காஸ் சிலிண்டர் வாடிக்கையாளர்களின், இ.கே.ஒய்.சி., எனப்படும் உண்மை சரிபார்ப்பு பணிக்கு, இன்றுடன் அவகாசம் முடிவடைய இருந்த நிலையில், வரும், 23ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. பொதுத்துறையை சேர்ந்த இந்தியன் ஆயில், பாரத் கேஸ், ஹிந்துஸ்தான் பெட்ரோலி பெட்ரோலியம், எண்ணெய் நிறுவனங்கள், வீடுகளுக்கு, 14.20 கிலோ எடையில், சமையல் காஸ் சிலிண்டர்களை விற்கின்றன.

சிலிண்டர் வாங்கிய பின், வாடிக்கையாளர்களின் வங்கிக் கணக்கில், மத்திய அரசின் மானிய தொகை செலுத்தப்படுகிறது. இதற்காக, தமிழகம் உட்பட நாடு முழுதும் சிலிண்டர் பயனாளிகளில் உண்மை சரிபார்ப்பு பணி நடக்கிறது.

## அமெரிக்க விசா: விதிமுறையில் மாற்றம்!




புதுடெல்லி, ஆக. 16–

அமெரிக்க விசா பெறுவதற்கான நேர்காணல் நடைமுறையில் புதிய மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தியாவில் பிறந்த குழந்தைகள் முதல் 17 வயது வரையிலான சிறுவர், சிறுமிகள், விசா நேர்காண லுக்கு பெற்றோருடன் கட்டாயம் நேரில் வர வேண்டும் என அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது.

முன்னதாக 14 வயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமிகளின் விசா விண்ணப்பத்திற்காக அவர்களை நேரில் அழைத்து வர வேண்டிய அவசியம் இல்லை. பெற்றோர்கள் மட்டும் நேர்காணல் மையத்துக்கு சென்று விண்ணப்பம் மற்றும் தேவையான ஆவணங்களை சமர்ப்பித்து வந்தனர்.

தற்போது இந்த நடைமுறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதால், பிறந்த குழந்தைகள் முதல் 17 வயது வரையிலான அனைவரும் பெற்றோருடன் நேரில் வர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த புதிய விதிமுறை காரணமாக அமெரிக்க விசாவுக்கு விண்ணப்பிக்கும் பெற்றோர்கள், நேர்காணல் தேதியில் குழந்தைகளையும் கட்டாயம் அழைத்து செல்ல வேண்டும்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



## இன்றைய கார்ட்டூன்




# தமிழகத்தில் உள்ள ஏரிகள், குளங்களை புனரமைக்கும் பணிகள் தொடக்கம்!

சென்னை, ஆக 16–

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் சுமார் 22,051 சிறுபாசன ஏரிகள் மற்றும் 69,777 குளங்கள் மற்றும் ஊரணிகள் உள்ளன. சிறுபாசன ஏரிகள் ஊராட்சி ஒன்றியங்களின் உரிமையிலும் பராமரிப்பிலும் உள்ளன. குளங்கள், ஊரணிகள் கிராம ஊராட்சிகளால் பராமரிக்கப்படுகின்றன.



இந்நீர்நிலைகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், மாநில நிதியில் செயல்படுத்தப்படும் சிறுபாசன ஏரிகள் புனரமைப்புத் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு அரசுத் திட்டங்களின் மூலம் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், மத்திய அரசின் VB – G RAMG திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் ஊரக உள்ளாட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள வரத்துக் கால்வாய்கள், ஏரிகள், குளங்கள் மற்றும் கால்வாய்களை புனரமைக்கும் பணிகள் தொடங்கும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

அதன்படி, 10,185 கால்வாய்கள், 809 ஏரிகள், குளங்கள் மற்றும் ஊரணிகளை புனரமைக்கும் பணிகள் நாளை தொடங்குகின்றன. இதற்காக சென்னையை தவிர்த்து மற்ற 37 மாவட்டங்களுக்கு ரூ. 507.92 கோடி நிதி ஒதிக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதிகபட்சமாக தஞ்சாவூர் மாவட்டத்துக்கு ரூ.116.38 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்துக்கு ரூ.32.69 கோடி, விழுப்புரம் மாவட்டத்துக்கு ரூ.30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# தவெக அரசு கடந்து வந்த 100 நாட்கள்..!

சென்னை, ஆக. 16–

தமிழகத்தில் த.வெ.க. அரசு ஆட்சி பொறுப்பேற்று நாளையுடன் (ஆகஸ்டு 17) 100 நாட்கள் ஆகிறது. இத்தனை நாட்கள் கடந்து வந்த பாதை வெற்றிப் பயணமாக அமைந்ததா?, வெற்றுப் பயணமாக இருந்ததா? என்பது தொடர்பான அலசல் இது.




**திராவிட கட்சிகளுக்கு முட்டுக்கட்டை போட்ட த.வெ.க.**

தமிழகத்தில் அரை நூற்றாண்டுக்கும் மேலாக தி.மு.க., அ.தி.மு.க. என்ற இரு திராவிட கட்சிகளே மாறி.. மாறி.. ஆட்சி அதிகாரத்தில் இருந்து வந்தன. இருபெரும் திராவிட கட்சிகளின் ஆதிக்கத்துக்கு, அரசியலில் 2½ வயது குழந்தையான த.வெ.க. முட்டுக்கட்டை போட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் நடந்த சட்டசபை தேர்தலில் த.வெ.க. வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. தமிழக முதல்–அமைச்சராக ஜோசப் விஜய், மே மாதம் 10–ந் தேதி பொறுப்பேற்றுக்கொண்டார். அவருடன் அன்றைய தினம் 9 அமைச்சர்களும் பதவியேற்றனர். தொடர்ந்து, மே 21–ந் தேதி நடைபெற்ற 2–வது அமைச்சரவை விரிவாக்கத்தில் 23 பேரும், மே 22–ந் தேதி நடைபெற்ற 3–வது அமைச்சரவை விரிவாக்கத்தில் 2 பேரும் அமைச்சர்களாக பதவி ஏற்றுக்கொண்டனர். அனைவருக்கும் துறைகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**த.வெ.க. அரசின் செயல்பாடு எப்படி?**

இந்த நிலையில், தமிழகத்தில் த.வெ.க. அரசு பொறுப்பேற்று நாளையுடன் (திங்கட்கிழமை) 100 நாட்கள் ஆகிறது. பதவியேற்ற அந்த நாள் (மே 10) முதல் இந்த நாள் (100–வது நாள்) வரை த.வெ.க. அரசின் செயல்பாடு எப்படி? என்பதை பற்றி தொடர்ந்து பார்க்கப்போகிறோம்.

முதல்–அமைச்சராக ஜோசப் விஜய் பதவியேற்ற மே 10–ந் தேதி 3 முக்கிய கோப்புகளில் கையெழுத்திட்டார். "2 மாதங்களுக்கு 500 யூனிட்டுகள் வரை மின்சாரம் பயன்படுத்தும் வீட்டு மின் நுகர்வோர்களுக்கு 2 மாதங்களுக்கு 200 யூனிட்டுகள் கட்டணமில்லா மின்சாரம் வழங்கப்படும்.

பெண்களின் பாதுகாப்புக்காக சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை மாநிலம் முழுவதும் உருவாக்கப்படும். தமிழ்நாட்டில் போதைப்பொருள் கலாசாரத்தை ஒழிக்க, 65 போதைப்பொருட்கள் தடுப்பு படை அமைக்கப்படும்" என்பவைதான் அவை.

**717 டாஸ்மாக் கடைகள் அடைப்பு**

அதன்பிறகு, குறுகிய நாட்கள் இடைவெளியில், புதிய புதிய அறிவிப்புகள் வெளிவரத் தொடங்கின. குறிப்பாக, கல்வி நிறுவனங்கள், வழிபாட்டு தலங்கள் அருகே செயல்பட்ட 717 டாஸ்மாக் மதுக்கடைகள் அடைக்கப்பட்டன. தொடர்ந்து, அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படியை 2 சதவீதம் உயர்த்தி வழங்க முதல்–அமைச்சர் விஜய் உத்தரவிட்டார். இதன் மூலம் 58 சதவீதமாக இருந்த அகவிலைப்படி 60 சதவீதமாக உயர்ந்தது.

**பயிர்க்கடன் தள்ளுபடி**

அதன்பின்னர், மாநிலம் முழுவதும் உள்ள அம்மா உணவகங்களை சீரமைத்து சுவையுடன் கூடிய தரமான உணவுகளை விநியோகம் செய்யுமாறு அதிகாரிகளுக்கு முதல்–அமைச்சர் விஜய் உத்தரவிட்டார். தொடர்ந்து, குறு விவசாயிகள் வாங்கிய ரூ.50 ஆயிரம் பயிர்க்கடனை தள்ளுபடி செய்ய அவர் உத்தரவிட்டார்.

அதன்பிறகு, மே 27–ந் தேதி டெல்லி சென்ற முதல்–அமைச்சர் ஜோசப் விஜய், பிரதமர் நரேந்திரமோடியை சந்தித்து பேசினார். அப்போது, மேகதாது அணை, தமிழக மீனவர் பிரச்சினை உள்பட 4 கோரிக்கைகள் அடங்கிய மனுவை அவரிடம் அளித்தார்.

**சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை திட்டம்**

ஜூன் 9–ந் தேதி குழந்தைகள், பெண்கள் பாதுகாப்புக்காக சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை திட்டத்தை முதல்–அமைச்சர் விஜய் தொடங்கிவைத்தார். அதன்பிறகு, அரசு ஆஸ்பத்திரிகளில் பிறக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை அறிவித்தார்.

தொடர்ந்து, கடந்த 5–ந் தேதி தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்டில், "திருமணமாகும் பெண்களுக்கு திருமண நாளில் அண்ணனின் சீர் என்ற திட்டத்தின் கீழ் 8 கிராம் தங்க நாணயமும், ஒரு பட்டுப்படவையும் வழங்கப்படும். குடிசை வீடுகளுக்கு பதிலாக 70 ஆயிரம் கான்கிரீட் வீடுகள் கட்டப்படும். பிளஸ்–1 மாணவர்களுக்கு ஹெல்மெட், வாட்டர் பாட்டிலுடன் கூடிய நவீன சைக்கிள் வழங்கப்படும். அரசு கல்லூரி மாணவர்களுக்கு லேப்டாப் கொடுக்கப்படும்" என்பது உள்பட பல்வேறு முக்கிய அறிவிப்புகள் இடம்பெற்றிருந்தன.

**பட்ஜெட்டில் 125 வாக்குறுதிகள்**

பட்ஜெட் தொடர்பாக கருத்து தெரிவித்த நிதி அமைச்சர் மரிய வில்சன், "த.வெ.க. தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதிகளில் 125 பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ளது" என்றார்.

இதற்கு மத்தியில், சத்தம் இல்லாமல் ஒரு சாதனையை தமிழக தொழில் துறை செய்துள்ளது. அதாவது, 100 நாட்களில் 104 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் 1 லட்சத்து 21 ஆயிரத்து 788 பேர் வேலைவாய்ப்பை பெறும் வகையில் ரூ.1 லட்சத்து 2 ஆயிரத்து 514 கோடிக்கு முதலீடுகளை ஈர்த்துள்ளது.

**தொழில் முதலீடுகள் ஈர்ப்பு**

குறிப்பாக, கடந்த 13–ந் தேதி நடைபெற்ற, வெற்றி தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாட்டில் மட்டும் போடப்பட்ட 97 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ரூ.67,452 கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டன. இதன் மூலம் 1 லட்சத்து 6 ஆயிரத்து 998 பேருக்கு வேலைவாய்ப்புகளும் கிடைக்க உள்ளன. அதுவும், தொழில் முதலீடுகள் அனைத்தும் ஒரே பகுதியில் குவிந்துவிடாமல், 23 மாவட்டங்களுக்கு பரவலாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, ராமநாதபுரம் மாவட்டத்தில் முதல்முறையாக தொழில் நிறுவனம் அமைய இருக்கிறது.

**முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள்**

இப்படி, சத்தம் இல்லாமல் தொழில் புரட்சியை த.வெ.க. அரசு ஏற்படுத்தி னாலும், சட்டம் – ஒழுங்கு பிரச்சினை, பாலியல் குற்றங்கள் அதிகரிப்பு, மின் தடை பிரச்சினை, குப்பைகள் சரியாக அகற்றப்படாதது உள்ளிட்டவை புதிய அரசின் மீது குற்றச்சாட்டுகளாக வைக்கப்படுகின்றன.

கடந்த கால ஆட்சிகளில், தி.மு.க. ஆளுங்கட்சியாக இருந்தால், அ.தி.மு.க. எதிர்க்கட்சியாக இருக்கும். அல்லது அ.தி.மு.க. ஆளுங்கட்சியாக இருந்தால் தி.மு.க. எதிர்க்கட்சியாக இருக்கும். ஆனால், இப்போது புதிதாக ஆட்சி பொறுப்பேற்றுள்ள த.வெ.க.வுக்கு தி.மு.க., அ.தி.மு.க. என்ற இரு திராவிட கட்சிகள் எதிர்க்கட்சிகளாக உள்ளன.

இதனால், சட்டசபையில் இரு எதிர் கட்சிகளின் கேள்விக் கணைகளை த.வெ.க. அமைச்சர்கள் சமாளிக்க வேண்டியுள்ளது. எதிரில் இருப்பவர்கள் சட்டசபை அனுபவத்தில் பழம் தின்று கொட்டை போட்டவர்கள் என்றாலும், ஆளும் தரப்பினரும் அதைவொரு சவாலாக ஏற்று சமாளித்து வருகின்றனர்.

மொத்தத்தில், கடந்த 100 நாள் த.வெ.க. ஆட்சி, ஊழலுக்கு எதிராக தனது பார்வையை கழுகுப்பார்வையாக அதிகரித்துள்ளதுடன், ஒவ்வொரு தடைகளையும் தாண்டி வெற்றி பெற்று வருவதாகவே தெரிகிறது.

# நடுராத்திரியில் விருந்தினர் மாளிகையில் இருந்து வெளியேற்ற முயற்சி: மஹுவா மொய்த்ரா எம்.பி. குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஆக. 16–



திரிணாமுல் காங்கிரஸ் பெண் எம்.பி.யாக உள்ளவர் மஹுவா மொய்த்ரா இணைய தளத்தில் பதிவிட்டுள்ள செய்தில் "Dear IPU {(Inter–Parliamentary Union–நாடாளுமன்றங்களுக்கு இடையிலான யூனியன்) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான உலகளாவிய அமைப்பு}, இந்தியாவில் நான் எம்.பி.யாக உள்ளேன்.

அதிகாரப்பூர்வ விருந்தினர் மாளிகையில் என்னுடைய அறையில் இருந்து வெளியேறுமாறு இரவு 9.97 மணிக்கு அரசு கேட்டுக்கொண்டது. பின்னர் 10.52 மணிக்கு மீண்டும் வெளியேறுமாறு வலியுறுத்தியது. விருந்தினர் மாளிகைக்கு வெளியே பாஜக கூட்டம் என் உயிரை பறிக்க துடித்துக் கொண்டிருந்த வேலையில் இவ்வாறுநான் கட்டாயப்படுத்தப்பட்டேன். இந்தியாவில் ஜனநாயகம் இந்த நிலையில்தான் உள்ளது" எனக் குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையில் மஹுவா மொய்த்ராவுக்கு சசி தரூர் ஆதரவு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக சசி தரூர் கூறுகையில் "அனைத்து ஜனநாயகக் கட்சியினரும் அவருடன் ஒற்றுமையுடன் நிற்க வேண்டும். ஒரு கும்பல் அவரை தாக்கத் துடித்து கொண்டிருக்கும் நிலையில் அரசு அவருக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும். ஒரு ஜனநாயகத்தில் இத்தகைய அடிப்படை விஷயங்களை எடுத்துரைக்க வேண்டிய அவசியம் இருக்கக்கூடாது. அதிலும் குறிப்பாக, நமது சுதந்திரப் போராட்டத்தின் உச்சகட்டத்தைக் குறிக்கும் நாளில் இது இன்னும் தேவையற்றது" எனத் தெரிவித்துள்ளார். இவ்விவகாரத்தில் தலையிடுமாறு கோரி, மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு மஹுவா மொய்த்ரா கடிதம் எழுதியுள்ளார். அந்த கடிதத்தில் "தனக்கு அதிகாரப்பூர்வமாக ஒதுக்கப்பட்டிருந்த சர்க்யூட் ஹவுஸ் (அரசு விருந்தினர் இல்லம்) அறையை காலி செய்யுமாறு நாடியா மாவட்ட நிர்வாகம் தன்னை வற்புறுத்தியது. இவ்விவகாரத்தை அவசரமாகக் கவனித்து, ஒரு முன்னுதாரணத்தை உருவாக்கி, நாடு முழுவதும் உள்ள பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கண்ணியத்தை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அறையை காலி செய்ய மறுத்ததைத் தொடர்ந்து, சர்க்யூட் ஹவுஸுக்கு வெளியே திரண்டிருந்த பெருந்திரளான மக்கள் ஜெய் ஸ்ரீ ராம் என்று முழக்கமிட்டனர். தனக்கு எதிரான துன்புறுத்தலுக்கு எதிராக நீதிமன்றத்தை நாடப்போவதாக கிருஷ்ணாநகர் தொகுதி எம்.பி.யான மஹுவா மொய்த்ரா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றக் கூட்டத்தொடருக்குப் பிறகு கிருஷ்ணாநகரில் உள்ள சர்க்யூட் ஹவுஸில் இரவு தங்குவதற்காக மொய்த்ரா அங்கு சென்றிருந்தார். ஒரு எம்.பி.யாக அங்கு தங்குவதற்கு தனக்கு உரிமை உண்டு என்று கூறிய அவர், தன்னைத் துன்புறுத்தும் நோக்கத்துடன் நள்ளிரவில் வெளியேறுமாறு மாவட்ட அதிகாரிகள் அழுத்தம் கொடுத்ததாக தெரிவித்தார்.

"மாலை 6.15 மணியளவில் நான் சர்க்யூட் ஹவுஸ் அறைக்குச் சென்றேன். ஊழியர்கள் எனக்கு வழக்கமாக ஒதுக்கப்படும் அறைக்கு என்னை அழைத்துச் சென்றனர். அந்த அறை தங்குவதற்குத் தயாராக வைக்கப்பட்டிருந்தது. மாலை 7 மணிக்கு எனது அறைக்குத் தேநீர் கொண்டு வரப்பட்டது. இரவு 9.20 மணிக்கு இரவு உணவு அங்கேயே பரிமாறப்பட்டது.

இரவு 9.47 மணிக்கு, நாடியா மாவட்ட கூடுதல் ஆட்சியரிடமிருந்து (Addition–al District Magistrate) எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. நான் அந்த இடத்தை காலி செய்ய வேண்டும் என்று அவர் தெரிவித்தார். அதற்கான காரணத்தை நான் கேட்டபோது, மேலிடத்திலிருந்து உத்தரவு வந்துள்ளது, தான் அந்தச் செய்தியைத் தெரிவிப்பவர் மட்டுமே என்று அவர் கூறினார்" என்று மஹுவா மொய்த்ரா குற்றம்சாட்டியுள்ளார்.

# இந்தியா, இலங்கை இடையிலான முதல் டெஸ்ட்: மழையால் பாதிப்பு..!

புதுடெல்லி, ஆக. 16–

இந்திய அணி இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகிறது. இதில், காலே நகரில் நடைபெறும் முதல் டெஸ்டில் டாஸ் வென்ற இந்திய அணி பேட்டிங் செய்ய முடிவெடுத்தது. அணியின் தொடக்க ஆட்டக்காரர்களில் யஷஸ்வி ஜெய்ஸ்வால் 32 ரன்களில் ரன்–அவுட் ஆனார். இந்தப் போட்டியில் கே.எல். ராகுல் சிறப்பாக விளையாடி 77 ரன்கள் எடுத்தார். காயம் காரணமாக அவர் ரிட்டையர்ட் ஹர்ட் முறையில் வெளியேறினார். கேப்டன் சுப்மன் கில் 16 ரன்களில் ஆட்டமிழந்தார்.



தொடர்ந்து சிறப்பாக ஆடிய விளையாடிய தேவ்தத் படிக்கல் 134 பந்துகளில் சதம் விளாசினார். ஆட்டம் மழையால் இடையிடையே பாதிக்கப்பட்டது. முதல் நாள் முடிவில் இந்தியா முதல் இன்னிங்சில் 73 ஓவரில் 2 விக்கெட்டுக்கு 288 ரன்கள் எடுத்துள்ளது. ரிஷப் பண்ட் 27 ரன்னும், படிக்கல் 131 ரன்னும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்நிலையில், இன்று 2–வது நாள் ஆட்டம் தொடங்க இருந்தது. காலை 10 மணியளவில் லேசாக தூறல் போட்டது. இதனால், களத்தில் நீர் தேங்காமல் இருப்பதற்காக பாதுகாப்பாக 'கவர்' செய்யப்பட்டது. எனினும், அதன்மீது மழை நீர் விழுந்தபடி இருந்தது. அவ்வப்போது ஊழியர்கள் அதனை பாதுகாப்பாக வெளியேற்றினர். தொடர்ந்து, மழை தூறிக்கொண்டே இருந்தது. மழையால் ஆட்டம் தொடங்குவதில் தொடர்ந்து காலதாமதம் ஏற்பட்டது. 11.40 மணியளவில் மதிய உணவுக்கான இடைவேளை விடப்பட்டது.

# யுஜிசி - நெட் தேர்வு: விடைக்குறிப்பு வெளியீடு?

சென்னை, ஆக. 16–

யுஜிசி – நெட் தேர்வுக்கான விடைக்குறிப்பை ஞாயிற்றுக்கிழமை (ஆக. 16) வெளியாகும் என தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.



நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர் பணியிடத்துக்கு தகுதி பெறுவதற்கும், அங்கு முனைவர் பட்டங்களை மேற்கொள்வதற்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் மற்றும் மத்திய அரசின் இளநிலை ஆராய்ச்சி உதவித் தொகை பெறுவதற்கும் தேசிய தேர்வு முகமை சார்பில் 'நெட்' தேர்வு நடத்தப்படுகிறது.

நாடு முழுவதும் இந்தத் தேர்வானது ஆண்டுக்கு இரண்டு முறை பல்வேறு நகரங்களில் நடத்தப்படுகிறது.

அதன்படி, இந்த ஆண்டுக்கான முதல் தேர்வு ஜூன் மாதம் 22 ஆம் தேதி முதல் 30 வரை ஆறு நாள்கள் நடத்தப்பட்டது. மேலும், ஜூலை 6 ஆம் தேதி மறுதேர்வும் நடைபெற்று முடிந்தது.

இந்தத் தேர்வின் விடைக்குறிப்புக்காக தேர்வர்கள் காத்திருக்கும் நிலையில், அவை இன்று வெளியாகும் என தேசிய தேர்வு முகமை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. யுஜிசி நெட் (UGC NET) மட்டுமல்லாது, அறிவியல் துறைகளுக்கான சிஎஸ்ஐஆர் நெட் (CSIR–NET), விவசாயம் மற்றும் விலங்கு அறிவியல் பிரிவுகளுக்கான ஐசிஏஆர் ஏஐஇஇ (பிஜி) மற்றும் (பிஎச்டி) ICAR AIEEA (PG) and AICE (PhD) ஆகிய தேர்வுகளுக்கான விடைக் குறிப்புகளும் வெளியிடப்பட உள்ளன. குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் தற்காலிக விடைக்குறிப்பைப் பார்க்கவும், அதில் ஏதேனும் திருத்தம் இருப்பின் தேர்வர்கள் முறையிடவும் தேசிய தேர்வு முகமை அறிவுறுத்தியுள்ளது. இதையடுத்து, தேர்வின் முடிவுகள் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தமிழகத்துக்கு எதிராக கர்நாடக பாஜகவினர் போராட்டம்! நயினாரும் அன்புமணியும் எங்கே போனீர்கள்? காங்கிரஸ் கேள்வி!

சென்னை, ஆக. 16–



கர்நாடகத்தில் தமிழகத்துக்கு எதிராகப் போராடும் கர்நாடக பாஜகவினரை தமிழக பாஜக தலைவர்களும் கூட்டணிக் கட்சித் தலைவர்களும் எதிர்த்துக் குரல் கொடுப்பார்களா என காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து மாணிக்கம் தாகூர் தனது எக்ஸ் பக்கத்தில் தெரிவித்திருப்பதாவது, "காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவுப்படி கர்நாடக அரசு உரிய தண்ணீரைத் திறக்காததால், தமிழக முதல்வர் தலைமையில் தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தை நாடியது. ஆணையத்தின் உத்தரவை கர்நாடகம் செயல்படுத்தக் கோரிய தமிழக அரசின் மனு மீதான விசாரணையை உச்சநீதிமன்றம் ஆகஸ்ட் 17–ஆம் தேதி விசாரணைக்கு வரவுள்ள நிலையை உணர்ந்து, தனது நிலையைப் புரிந்துகொண்ட கர்நாடக அரசு தற்போது கபினியிலிருந்து முறைப்படி தண்ணீரைத் திறந்துவிடத் தொடங்கியுள்ளது.

இந்த மாதத் தொடக்கத்திலேயே பி.எஸ். எடியூரப்பா, பி.ஒய். விஜயேந்திரா உள்ளிட்ட கர்நாடக பாஜகவினர் தமிழகத்துக்குத் தண்ணீர் திறக்கக் கூடாது என்று போராட்டங்களை முன்னெடுத்தனர்; தற்போது சட்டப்படி தமிழகத்துக்கு முறைப்படி தண்ணீர் திறந்துவிடப்படும் நிலையிலும், அதைத் தடுத்து நிறுத்த அணை முற்றுகை நாடகங்களை அறிவித்துப் பதற்றத்தை ஏற்படுத்துகிறார்கள்.

தமிழ்நாட்டுக்குச் சட்டப்படி கிடைக்க வேண்டிய உரிமையைத் தடுத்து நிறுத்தத் துடிக்கும் பாஜகவின் இந்த வன்மமும் தமிழர்களுக்கு எதிரான துரோகமும் மன்னிக்க முடியாதது.

பாஜகவின் கூட்டணி கட்சிகள் காங்கிரஸ் மீது பழி போடுவதற்கு முன் ஒன்றை நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும்; கர்நாடகத்தில் காங்கிரஸ் முதல்வரே இருந்தாலும் தவறு செய்தால் தமிழகத்தின் உரிமைக்காகத் தட்டிக்கேட்க நாங்கள் ஒரு போதும் தயங்கியதில்லை.

ஆனால், கர்நாடக பாஜகவினர் தமிழகத்துக்கு எதிராகச் செய்யும் இந்த அப்பட்டமான துரோகத்தைத் தட்டிக்கேட்க முடியாமல் நயினார் நாகேந்திரன் எங்கே போனீர்கள்? கூட்டணி கட்சி தலைவர் அன்புமணி எங்கே இருக்கிறார்? ஏன் கூனிக் குறுகி மௌனம் காக்கிறீர்கள்? தமிழ்நாட்டைப் பற்றியும் நமது விவசாயிகளைப் பற்றியும் இவர்களுக்குக் கவலையே இல்லையா?

தமிழக விவசாயிகளின் வயிற்றில் அடிக்கும் உங்கள் கட்சியினரைக் கண்டிக்க முடியாமல் இங்கு வந்து அரசியல் நாடகம் நடத்துவதுதான் பாஜகவின் லட்சணமா? பாஜகவின் இந்த நயவஞ்சக அரசியலும், இதன் பின்னணியில் உள்ள உண்மைகளும் இப்போது வெளிச்சத்திற்கு வரத் தொடங்கிவிட்டன" என்று கூறியுள்ளார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020